உ

கணபதி துணை.

ஸ்ரீ உமாவீரசேகரர்

துவாதச மஞ்சரி.

இது

ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை யூர்

வயி. வீர. ராமசாமிச் செட்டியாரவர்களால்

காரைக்குடி

குமரன் அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றது.

1923.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய காரைக்குடி
ப. மாசிலாமணி தேசிகர் இயற்றியது.

பொன்னு ரளகை யுமாவீர சேகரன் பொன்னடியில்
தன்னு ரிறைதிரு மஞ்சரி யாவுறத் தண்ணளியால்
மன்னு கமப்பொருண் மெய்கண்ட தேவன் மலர்ந்ததனைத்
தென்னூர் தரப்புனைந் தான்சொக்க லிங்கநந் தேசிகனே.

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய
காரைக்குடி
நா. முருகப்ப செட்டியாரவர்கள் இயற்றியது.

சீரேறு மதிகுலங் குடிப்பெயர் பெருங்குடி
திருவேட்பூ ருடைமை பட்டஞ்
செந்நிராஜ நாராணபு ரமருதங் கூர்சொல்குல
சேகரபு ரங்கள் காணி
நாரேறு சிவசமய முற்றிலகு தனவசிய
நன்மரபு ராம நாதன்
நற்றவ முளுற்றிமுன் பெற்றபுத் திரனன்பு
நாட்டுமுயர் சொக்க லிங்கப்
பேரேறு தேசிக னுமாவீர சேகரப்
பிள்ளைகற் கேற்கும் வண்ணம்

பேசு தமிழ் மஞ்சரியை வீசுபுகழ் கொண்டிடப்
பேருலக மூவகை யெய்தத்
தேரேறு சிவஞான போதார்த்தம் யாவையுந்
தெளிவுறச் செய்த தன்பாற்
றிருவடிப் பேற்றினைத் தருமஞ் செழுத்துறத்
தேற்றினன் சிவாய வென்றே.

சீரா ருமாவீர சேகரற்கா மஞ்சரி நூல்
தேராதா ருள்ளத்தைத் தேர்விக்கு—நேராகத்
தக்கசிவ ஞானந் தனைவிளக்கு மன்னதுதான்
சொக்கலிங்க தேசிகன்வாய்ச் சொல்.

இந் நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய காரைக்குடி
ராம. உ. இராமசாமிச்செட்டியார் இயற்றியது.

முந்துரை சிவசந் தானமா முதல்வர்
மொழிந்தருள்பதி நூற் பன்னிரு பாவை
சிந்தையி லென்போ லியர்களுந் தெளியத்
தேற்றின னுமைபால் வீரசே கரர்க்கு
வந்தபன் னிருபா மஞ்சரி நூலால்
வளமலி காரை மாநகர் வாழ்வோன்
சந்ததஞ் சிவபூ சாதுரந் தரனெஞ்
சற்குரு சொக்க லிங்கதே சிகனே.

கணபதி துணை.

சாக்கை யென்று வழங்கும் அளகைமா நகர்

ஸ்ரீ உமாவீரசேகரர்

துவாதச மஞ்சரி.

காப்பு.

சிவஞான போதநூல் செய்தருண்மெய் கண்ட
சிவனேயர்க் காகமா றேற்றுஞ்—சிவசூந
வளமளகை மேவியக யானனக ணேசபத
தாமரைக ளே[illegible] சாற்று.

நூல்.

பிரமாண வியல்

உலகமவ னவளதென மூன்றுருப் பினதாகி
யுற்பத்தி திதிலயங்க
ளுறுதலா லினையதொழில் சடவுலகு * சதசத்
துஞற்றிடா வவைகடந்து
நிலவுமா னேதோற்ற வெளிவருமுள் பொருளாகு
நிகழ்தனை யன்ன வாறே
நிறுத்தாது கன்மபா கம்பெற வொடுக்கியிரு
ளிறையுமல பாக முறுவா

---

* சதசத்து—உயிர்.

ணிலகநேர் தோற்றிமா யாபாக முறநிறுத்
திறைமையா னொருவ னுக்கே
யென்றுமுள தயனரிமு னோருல கொடுங்குநா
ளிவனிடை யொடுங்கு பவரே
திலதைல மெனவெங்கு நிறைபரம பதி † யந்த
சிவனே யெனு விளக்குஞ்
சிவஞான போதானு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (க)

ஒடுக்குலகை மீண்டுற விடுக்குமா * னுலகுயிரி
னுடனுயிர்க ளென்ன வொன்று
யொள்ளிரவி கண்களென வேறுகி விழியொளியு
முயிரறிவு மென்ன வுடனு
யடுத்துநில வத்துவித [illegible] றுயிர்கடன்
தாணைவழி சார்வினைக்கேற்
பாயிறப் பொடுபிறப் பாதிமேற் கொள்ள[illegible]வ்
வாணையாஞ் சிற்சத் திதன்
னிடத்தனவ ரதம்வாழ நீக்கமற வேவீற்
றிருந்தருள்வ னென்னு மிதனு
லியல்கன்ம மலமுடம் பாதிதரு மாயைமு
னிசைத்தவா ணவமு மாகத்

---

† அந்தசிவன்—அந்தத்தைச் செய்கின்றசிவன். * உலகு—அசேதனப் பிரபஞ்சம். உயிர்—சேதனப்பிரபஞ்சம். இவ்விரண்டினிடத்தும் அரன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவிதமாக நின்றானென்க.

திடத்துயிர்க ளொப்பற்று முமலமா யேயந்
திரோதாயி யுண்மை தேற்றுஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (உ)

சூனியந் தேகமிந் திரியமந் தக்கரண
சூக்கவுட லம்பி ராணன்
றெல் 0 பிரம சமுகமுயி ரெனுமெண்ம ரிற்பின்பு
சொல்கரண வாதி யொழிய
வேனையெழு வரைமுறையி னிலதென்ற லெனதுடம்
பென்றலைம் புலனு மறித
லியல்கனவி னிகழ்வறித § றுயிலின்க ணின்புதுன்
பின்மையுட றொழிலு ளுமை
தானறித வின்றியற [illegible]ப்பவறி வுறுதலச்
சமுகங்க ளுயிரெ னும்பேர்
தரி[illegible]து வெவ்வேறு பேர்கோட லின்னமுறை
சாற்றியவ் வேழின் வேறாய்த்
* தீனதையின் மாயையுட லின்கணுயி ருளதென்று
[illegible]வதித் தியம்வி ளக்குஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௩)

---

0 [illegible]ரமசமுகம்—உம்மைத்தொகை § துயிலின்கண் இன்ப துன்ப அநுபவமின்மையும் உடம்பு தொழிலுளுமையுமாகிய இச டும் பிராணன்மவாதி ஒருவனை மறுப்பக்கூறியவாமென்க. ஸ
* தீனதை—எளிமை.

இலக்கணவியல்.

அரசருல கியல்பகுத் தாய்ந்துசெய வாய்ந்தது
யாயமைச் சரைய டுத்தோர்
தாற்றலென வேசகச மலமறைப் பாலறி
வடங்கலா லதன்வி ளக்கம்
புரியுமந் தக்கரண மருவிநின் றுய்க்குமுயிர்
புகலுமக் கரண மன்றாற்
போதமுணர் விப்பவுணர் சித்தாகு மாயினும்
பூரண வுணர்ச்சி யின்மை
விரவலாற் கேவலா வத்தையைந் தாறுமவைகண்
மெல்லணைச் சார்ந்து அயின்முன்
மெலிதாக நிகழுமே ழைங்கருவி புருவகடு
மேவுசாக் கிரமு ளாக்
தெருளிலிவை யுறலுயிர்ப் பொதுவிலக்கணமென்று
செப்பிமேற் சேற லோர்க்குஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௪)

முன்னுரைசெ யின்னுயிரி னுலோரோர் விடயங்கண்
முழுதளந் தறிந்து * மெய்வாய்
முதற்பொறிக ளறிகின்ற தமையுமுயிர்களேயுமுணர்
மூதறி வுறுமை போல

---

* மெய்வாய்முதற் பொறிகள் அறிந்தும் என்க.

வன்னவுயிர் தனையுமறி விக்குமுதல் வனையுமறி
யாநிலைய தாகு மனைய
வறிவுறுதல் வினைவழிச் செலுத்தும்† திரோதையரு
ளதனினு மஃதி ரும்பு
தன்னையீர்த் திடுகாந்த மென்னவசை வற்றசிவ
சங்கற்ப மேத ரலினத்
தனிமுதல் விகாரமுற லின்றென் றுணர்த்திமுற்
சாற்றுதுணை முதலெ * னிபமாய்ச்
சென்னிலைய பாசலக் கணமுறைத் தனையவலி
தீர்திறனு மேல்வி ளக்குஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௫)

ஆயறிவு றப்படின சத்தாகு மறியப்ப
டாதபொருள் சூநி யம்மே
யாதலினவ் விருவகையு மின்றியப் பாசபசு
வறிவுகளி னறியொ ணாத
தூயசிவ மாயுரிய சிவஞான மொன்றினுணர்
சுத்தசத் தாய்வி ளங்குந்
தொன்மையாற் சிவசத் தெனப்பெரியர் புகல்வரத்
துகளறுத் தாளு ○ மரனை

---

† திரோதையருள்—பண்புத்தொகை. * நிபம்—காரணம்; இதனைத் துணைமுதலென்பவற்றுடன் சேர்த்துத்துணைக்காரண முதற்காரணமென்க. ○ அரனைப்புகல்வரென்க.

யேயுமிவ் வீரியல்பு மேசிவ சொரூபத்
 திலக்கண மொடுங்கி வருமவ்
வியல்பினிலே யுறுபாச வகைகளுஞ் சடசத்
 தெனப்படுமில் பொருள்க ளலவாந்
தேயமிகு சிவசத் தெனப்பரனை யோதிய
 திறத்துமுணர் கெனவி ளக்குஞ்
சிவஞான போதா நு பவர்காணு மாவீர
 சேகர சிவாய நமவே. (௬)

சாததவியல்.

முற்புகலு முப்பொருளின் முற்பதியின் மூதொளியின்
 முன்னடங் குற்ற வுலகை
முதல்வனறி யானுலகு ம[illegible]சட மாதலான்
 முதல்வனை யறிந்தி டாதா
லப்பரம சத்தையு மசத்தெனு லகத்தையுமு
 னறிவதவ் விரண்டு மாகா
தவற்றின்வே றுயனைய சத்தினை யசத்தினை
 யடுத்துணரு மன்ன சார்பி
னிற்பெயர்கொள் சதசத் தெனுமுயிர்க் குரியதே
 யிவ்வுயி ரநாதி யேசா
றிருளிரித் தருளுறற் குரியசா தநமுறை
 யியற்றுமதி காரம் வாய்ந்து
செப்புமுப தேசியா யனையநெறி நின்றுயுந்
 திறமினிது தேற்று வாய்மைச்

சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (எ)

மேலும்ப சிக்குமுண வுண்டலா லாம்பயனின்
மேவுசொர்க் காதி நல்கும்
வேள்விபோ லொழியாது தொடர்சரியை முதலிய
விசேடதவ முற்செ யுயிரின்
பாலன்பு கண்டுமுன முண்ணின் றுணர்த்திய
பரன்குருவு மாய்முன் வந்து
பாய்பொற் றியென் வேடரின் வளர்ந்தயர்ந் தனைமகிப
பாலனீ நின்பெ ருஞ்சீர்
சாலுந்த ரத்திதென வோர்த்தளவி லவ்வேடர்
சார்பொழித் தனைய முதல்வன்
றன்னையத் துவிதநிலை யிற்கலந் தடிநிழற்
சார்ந்துவாழ் வுறும வுயிரென்
சிலந்தெ ரித்துரிய சாதந மியற்றுமுறை
தேற்றுசித் தாந்த வாய்மைச்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (அ)

சிகைமுடித் தோதுசிவ தெரிசநத் தாலுடன்
றிகழான்ம சுத்தி நிகழ்வு
* தேர்தரப் பசுபாச ஞானங்க ளாலறிதல்
செல்லாத பரம பதியை

* தேர்தர—உண்மைதேற்றுமென்க.

ஸ்ரீ உமாவீரசேகரர்

0 யகமொழித னறிவிடைச் சிவஞான விழியினு
ராய்ந்தறிக வறியி னதனு
லவனிமுத னுதமுடி வாயபா சங்கண்முழு
துலைகாத மெனவோ டுமென்
றிகலற வுணர்ந்துநின் றொருவனு * மவற்றைமு
னியம்புபதி ஞான மிடர்வெப்
பிரித்திடுத ணிழலாய் விளங்குமப் பாசமற்
றிறைஞான முற்று ஞேயந்
திகழுமக் காட்சிசலி யாதெழுத் தைந்துமுறை
செப்புகென வுண்மை தேற்றுஞ்
சிவஞான போதாநு பவர்கா ணுமாவீர
சேகர சிவாய நமவே. (௧)

பயனியல்.

சாதனத் தாம்பயன் பாசமொரு வுதல்வீடு
சார்தலெ னிரண்டி னப்பா
சங்கழ லுறச்செய்பணி † யோர்தரப் பெத்தநிலை
தனில்வேறு காணொ ணுமை
0 னுதனுயி ருடனின் றறிந்திடவு மனையவுயிர்
நானறிந் தேனென் னுமா

---

0 அகம்ஒழி—நான்என்பது ஒழிந்த. அகம்பிரமக்கோள் ஒழிந்த எனினுமாம். * அவற்றை ஒருவனுமென்க.

‡ ஓர்தர வாய்மைதேற்றும் என்க. 0 நாதன் நண்ணிநின்ற ஒற்றுமைபோலென்க.

நண்ணியதன் வழிநின்ற வொற்றுமையி *னிங்குயிரக்
காதனுட னின்ற றியினு
மேதமறு தனையவனின் வேறுகாண் பஃதின்றி
யேகனென வொன்றி யாது
மெமக்கொர்செய விலையருளி னலதெனமுனைப்பின்றி
யிறைபணி வழாது நிற்பிற்
றீதுதரு முப்பாசம் வீடுமென வற்போடு
சித்தாந்த வாய்மை தேற்றுஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௧௦)

காரிருளி னுறுபொருள்கள் காட்டுசுடர் தானுமுன்
கண்டுநின் றேவி ளக்குங்
காண்பதுகண் ணேனுமன முடனின்று காட்டியுங்
கண்டுமுப கார மேசெய்
§ சீருறழ வாருயிர்செ லெவ்விழி பிறப்பினுஞ்
சேர்ந்துநின் றவ்வு யிர்க்கெத்
திறப்பொருள்க ளுங்காட்டு தலுமன்றி என்றுந்
திருத்தனு யாதும் வேண்டா
நேரிலிறை யாகியுங் கண்டுமுப காரஞ்செய்
நிறையருண் மறப்பி னொருவா
நிகரில்பா தகமிதெனு மயர்வில்பே ரன்பினடி
நீழலின் பாரு முத்தர்

---

* இங்கு—இம்முத்திநிலையில். § சீருறழ—சீரைப்போல.

தேருமறி விச்சைசெய லயராமை மெய்யன்பு
சீபாத முறலெல னுஞ்சீர்ச்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௧௧)

அரனடியி னின்புற்று வாழ்சீவன் முத்தர்து
யறிவிச்சை செயல்க ளொருவா
றகன்றுபுற முற்றிடினு முலகைநோக் காதமல
னருணிலைக ளேநோக் க†லோர்
தாவனைய முத்தர்மீ ளாதுதாள் சேரலொட்
டாமல வழுக்கு முற்றுந்
தருஞான நீரினற் பற்றறக் கழுவியத்
தகையன்ப ரோடு மருவி
வருமயக் கற்றுமெய் யன்புமிகு மப்பெரியர்
வாய்ந்தசிவ வேட மதுவும்
வயங்குஞ் சிவாலயமு மன்னுசிவ மாக்கண்டு
வழிபடுவ ரென்ற னையர்தந்
தெருளுமறி விச்சைசெயன் மூன்றுமிம் மூன்றின்முறை
சேர்ந்துவாழ் திண்மை தேற்றுஞ்
சிவஞான போதாநு பவர்காணு மாவீர
சேகர சிவாய நமவே. (௧௨)

துவாதசமஞ்சரி முற்றிற்று.

---

† ஓர்தாத் தேற்றுமென்க.